**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13- ஆம் நாள் புதன்கிழமை

TNTV06-000198-2019

**அசல் வழக்கு எண்.139/2019**

தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி லிமிடெட்,
அஷேசம் கிளை, மன்னார்குடி அதன் சார்பாக
அதிகாரம் பெற்ற முகவர் மற்றும்
கிளை மேலாளர் U. சுனில்குமார்.
(Amended as per order in I.A.No.43/2025 in Date : 28.01.2025)

.... வாதி

// **எதிர்**//

S. வீரமணி .... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.சரவணன், B.A., B.L., அவர்களும், பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பி பெறப்பட்டும், பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் கடந்த 08.04.2022 ம் தேதியன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை** :-

வாதி வங்கிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை ரூ.45,916/- தொகையை செலுத்த வேண்டும் என்று கடன் கணக்கு எண்.278700310102971 ஐ பொறுத்த வரை

தற்போதைய வட்டி விகிதத்தில் 9.00% வருடத்திற்கு அடுத்தடுத்த வட்டியுடன், ஆண்டுக்கு 2% அபராத வட்டியுடன், வழக்கு தொடுத்த நாளிலிருந்து இதுநாள் வரை நிர்ணயிக்கப்பட்ட தேதி வரை மாதாந்திர தொகை மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகைக் கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **திருத்தப்பட்ட வாதி தரப்பு வழக்குரைச் சுருக்கம்** :-

வாதி வங்கி ஒரு இந்திய அரசு சார்ந்த வங்கியாகும். அதன் தலைமை அலுவலகம் தூத்துக்குடியில் உள்ளது. வாதி வங்கிக்கு இந்தியா முழுவதும் கிளைகள் உள்ளன. வாதி மன்னார்குடி தாலுக்கா, அஷேசம் என்ற கிராமத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறார். வாதி வங்கி இயக்குநர்கள் வங்கி சார்பாக வழக்கு தாக்கல் செய்ய வாதிக்கு அதிகாரம் அளித்து எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின்படி தாக்கல் செய்ய வாதிக்கு முழு அதிகாரம் உள்ளது.

மேற்படி பிரதிவாதி வாதி வங்கியின் வாடிக்கையாளர் ஆவார். பிரதிவாதி வாதி வங்கியை அணுகி நகைக் கடன் கேட்டதன் அடிப்படையில் கடந்த 23.10.2017 ம் தேதியன்று ரூ.90,000/- கடன் கணக்கு எண்.278700310102971 என்ற கணக்கின் அடிப்படையில் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடன்களுக்கு பிரதிவாதி அவருடைய நகைகளை வாதி வங்கியில் அடமானமாக வைப்பீடு செய்துள்ளார். மேற்படி கடன்களுக்கு கூடுதல் ஆதரவாக 23.10.2017 ம் தேதியன்று ரூ.90,000/-க்கு வருடம் ஒன்றுக்கு 7.00% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ஒரு கடனுறுதி சீட்டை பிரதிவாதி வாதி வங்கிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்துள்ளார்.

பிரதிவாதி மேற்படி கடனை வாதி வங்கி அவ்வப்போது மாற்றி நிர்ணயிக்கும் வட்டியை ஏற்றுக்கொண்டு அசலையும், வட்டியையும் முறையாக செலுத்துவதாகவும்,

மேலும், குறிப்பிட்ட காலத்தில் கடன் தொகையை செலுத்த தவறும்போது தவறுதல் வட்டி 2% கூடுதலாக செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டு கடன் ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி கடனுக்கு தற்போதைய வட்டி விகிதம் 9.00% ஆகும்.

மேற்படி கடன்களை பிரதிவாதி பெற்ற பின்பு கடந்த 15.12.2017 ம் தேதியன்று பிரதிவாதி மற்றும் 73 நபர்கள் வாதி வங்கியில் அடமானம் வைத்துள்ள நகைகளை பரிசோதனை செய்தபொழுது பிரதிவாதி மற்றும் 73 நபர்கள் அடமானம் வைத்த நகைகள் அனைத்தும் போலியானவை என்பது தெரிய வந்துள்ளது. மேற்படி போலியான நகைகளை அடமானம் வைத்து கடன் பெற்றவர்களில் பிரதிவாதியும் ஒருவர் ஆவார். மேற்படி சங்கதிகள் தெரிந்த உடனேயே வாதி வங்கியின் அப்போதைய மேலாளர் திரு.கோவிந்தராஜன் அவர்கள் திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு காவல்துறையில் அளித்த புகார் மனுவின் அடிப்படையில் வாதி வங்கி அப்போதைய நகை மதிப்பீட்டாளர் G.K.ஆறுமுகம் மற்றும் 73 நபர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 406, 408, 465, 468, 471, 420, 381 மற்றும் 120B ஆகிய குற்றப் பிரிவுகளின்கீழ் குற்ற எண்.17/2017 ஆக கடந்த 16.12.2017 ம் தேதியன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பிரதிவாதி போலியான நகைகளை அடமானம் வைத்து மேற்படி கடனைப் பெற்றுள்ளதால் கடனை வசூலிப்பதற்கு கடனுறுதிச்சீட்டு அடிப்படையில் இவ்வழக்கினை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்வதை தவிர வாதி வங்கிக்கு வேறு சட்டப்பூர்வமான வழியில்லை. மேற்படி கடனை பிரதிவாதி முறையாக திருப்பி செலுத்தாத நிலையில் வாதி வங்கியின் மேலாளர் நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அவரை தொடர்புகொண்டு கடனைத் திரும்ப செலுத்த கேட்டபொழுதும் அவர் மேற்படி கடனுக்குரிய அசலையோ அல்லது வட்டியையோ இதுநாள் வரை செலுத்தவில்லை.

வாதி வங்கி முறையாக பராமரித்து வரும் கடன் கணக்கின் அடிப்படையில் கடந்த 25.02.2019 ம் தேதியன்று வரை பிரதிவாதி நான்கு கடன்களுக்கும் செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ.45,916/- ஆகும். மேற்படி கடனை பிரதிவாதி சட்டப்படி திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் ஆவார். எனவே வாதி வங்கிக்கு பிரதிவாதி ரூ.45,916/- ஐ தீர்ப்பு தேதி வரை வட்டி தொகையை செலுத்த கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பி பெறப்பட்டும், பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் கடந்த 08.04.2022 ம் தேதியன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

**4)** வாதி தரப்பில் வாதி வங்கியின் கிளை மேலாளர் சந்தனராஜ் வா.சா.1 ஆகவும், வாதி வங்கியின் தற்போதைய கிளை மேலாளர் சுனில்குமார் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வா.சா.1 ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களும், வா.சா.2 ன் மூலம் வா.சா.ஆ.4 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) **வாதி வழக்குரையில் கோரியவாறு வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சினை ஆகும்.**

**6) <u>தீர்வு</u> :-**

**1.** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, நிரூபண வாக்குமூலம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக வாதி வங்கியின் கிளை மேலாளர் வா.சா.1

ஆகவும், தற்போதைய கிளை மேலாளர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தலைமை அலுவலகத்தில் வாதிக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 23.10.2017 ம் தேதியன்று பிரதிவாதி ரூ.90,000/- கடன் பெற்றுதற்குரிய கடனுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.2 ஆகவும், கடன் விவரப்பட்டியல் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 04.12.2020 ம் தேதியன்று தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட் அதன் இயக்குநர்களால் வங்கி மேலாளருக்கு எழுதி கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**2.** வாதி வங்கியில் பிரதிவாதி பெற்ற நகைக் கடன் தொகையை செலுத்தாத காரணத்தால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தொகை ரூ.45,916/- வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியது அவசியமாகும்.

3. பிரதிவாதி கடந்த 23.10.2017 அன்று நகைக் கடன் வேண்டி விண்ணப்பித்து அதற்காக வாதியின் வங்கியில் (தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி) கடன் கணக்கு எண். (278700310102971) தொடங்கியுள்ளார். பிரதிவாதி நகைக் கடன் கணக்கிற்கு நிதிபெறும் வரம்பாக ரூ.90,000/- அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கடந்த 01.02.2018 முதல் 25.02.2019 வரை தொகை எதுவும் செலுத்தவில்லை என்பது வாதி தரப்பு ஆவணங்களின் வாயிலாக புலனாகிறது. வாதி வங்கிக்கு பிரதிவாதி ஒப்புக்கொண்ட விகிதத்தில் கடனாகப் பெற்ற தொகையினை வட்டியுடன் சேர்த்து செலுத்த கடமைப்பட்டவர் என்பது வாதி தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமான பத்திரத்திலிருந்து தெரிய வருகிறது.

**4.** வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்பது வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது. வாதி வங்கி கணக்கிட்டு கேட்டிருக்கும் வட்டி சட்ட முறையானதாக இருக்கிறது. வாதி தரப்பு சான்றாவணங்கள் அனைத்தும் வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக அமைந்துள்ளது.

**5.** மேலும், பிரதிவாதி இவ்வழக்கில் முன்னிலையாகி எதிர்வாதம் செய்து சான்றுகளை முன்னிட்டு வாதியின் வழக்கை பொய்ப்பிக்கவில்லை. வாதி வங்கி பிரதிவாதிக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டும் பிரதிவாதி வருகையில்லாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், வாதியின் வங்கி வழக்கினை நிராகரிப்பதற்கு காரணம் ஏதுமில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6.** எனவே, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வழக்குரையில் கண்டுள்ள தொகையினையும், வழக்குரை தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை நாள் வரையுள்ள வட்டியும், கடனை முழுமையாக தீர்க்கும் வரையுள்ள பின் வட்டியும் செலுத்த இந்த பிரதிவாதி கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7) முடிவில்,**

1. இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.
2. இவ்வழக்கின் வாதிக்கு பிரதிவாதி வழக்குத்தொகையான ரூ.45,916/- (ரூபாய் நாற்பத்து ஐந்தாயிரத்து தொலாயிரத்து பதினாறு மட்டும்) தொகையினையும், வழக்குரை தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பு நாள் வரை ஆண்டு ஒன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பு நாள் முதல் தொகை வசூலாகும் நாள் வரை ஆண்டு ஒன்றுக்கு 6% வட்டி செலுத்தவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.13 18:07:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**வாதி தரப்பு சாட்சிகள்** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.சந்தனராஜ் (கிளை மேலாளர்), த/பெ. சுகுமார். |
| வா.சா.2 | திரு.சுனில்குமார் (கிளை மேலாளர்), த/பெ. உதயகுமார். |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | -- | தலைமை அலுவலகத்தில் வாதிக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது). |
| வா.சா.ஆ.2 | -- | 23.10.2017 ம் தேதி பிரதிவாதி ரூ.90,000/- கடன் பெற்றுதற்குரிய கடனுறுதி சீட்டு அசல். |
| வா.சா.ஆ.3 | -- | கடன் விவரப்பட்டியல் கணினி நகல். |
| வா.சா.ஆ.4 | 04.12.2020 | தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி லிமிடெட் அதன் இயக்குநர்களால் வங்கி மேலாளருக்கு எழுதி கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணம். |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.13 18:08:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.